இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023


# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 131 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – மார்கழி 5 – வியாழக்கிழமை 21 டிசம்பர் 2023 – மதுரை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 131: Thiruvalluvar Year - 2054 - Margazhi 5 - Thursday 21 December 2023 - Madurai 8 Pages ₹ 5.00





இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களை, நேற்று முன்தினம் (19.12.2023) புதுடெல்லியில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சந்தித்து, மிக்ஜாம் புயல் கனமழையால் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு விரைந்து நிதி ஒதுக்கீடு செய்யக் கோரியும் – தென் மாவட்டங்களில் தற்போது பெய்த அதி கனமழையால் ஏற்பட்ட பாதிப்புகள், மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்து எடுத்துரைத்து, அப்பாதிப்புகளைச் சீரமைத்திடத் தேவையான நிதியினை விரைந்து ஒதுக்கீடு செய்திட வேண்டும் என்று கேட்டுக்கொண்டும் கோரிக்கை மனுவினை (Memorandum) அளித்தார்.

## 4 தென் மாவட்டங்களின் உடனடி வாழ்வாதார உதவிகளுக்கு ரூ.2 ஆயிரம் கோடி அவசர நிவாரண நிதி வழங்கிட வேண்டும்!

### வரலாறுகாணாத வகையில் தமிழ்நாட்டில் மழை வெள்ள பாதிப்பு!

# தேசியப் பேரிடராக அறிவித்திடுவீர்!

### புதுடெல்லியில் பிரதமரிடம் மனு வழங்கி - முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

**புதுடெல்லி, டிச. 21 -**

**“மிக்ஜாம் புயல் மழையால் ஏற்பட்ட பாதிப்புகள் மற்றும் தென் மாவட்டங்களில் அதிகனமழையால் ஏற்பட்ட பாதிப்புகளை தேசியப் பேரிடராக அறிவித்து, சீரமைப்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள விரைந்து நிதி ஒதுக்கீடு செய்திடுவீர்!” என - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், புதுடெல்லியில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களைச் சந்தித்து கோரிக்கை மனு அளித்தார்.**

அதன் விவரம் வருமாறு:-

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களை நேற்று முன்தினம்(19.12.2023)புதுடெல்லியில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சந்தித்து, மிக்ஜாம் புயல் கனமழையால் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு விரைந்து நிதி ஒதுக்கீடு செய்யக் கோரியும், தென் மாவட்டங்களில் தற்போது பெய்த அதி கனமழையால் ஏற்பட்ட பாதிப்புகள், மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்தும் எடுத்துரைத்து, அப்பாதிப்புகளைச் சீரமைத்திட தேவையான நிதியினை விரைந்து ஒதுக்கீடுசெய்திட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு கோரிக்கை மனுவினை (Memorandum) அளித்தார்.

‘மிக்ஜாம்’ புயல் கனமழையால்சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் வெள்ளம் சூழ்ந்து மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டது குறித்தும், புயல் மழையால் சாலைகள், பாலங்கள், பள்ளிக் கட்டடங்கள், அரசு மருத்துவமனைகள் போன்ற பொதுக் கட்டமைப்புகளும், மின்சார உட்கட்டமைப்புகளும், உள்ளாட்சி அமைப்புகளில் குடிநீர்க் கட்டமைப்புகள் கிராமச் சாலைகள் போன்றவைகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் குறித்தும், தமிழ்நாடு அரசு மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டதால் பாதிப்பிற்குள்ளான பகுதிகளில் மிக விரைவாக இயல்புநிலை திரும்பியது குறித்தும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இந்தியப் பிரதமர் அவர்களிடம் எடுத்துரைத்தார்.

**தமிழ்நாட்டில் மழை வெள்ளச் சேதத்தைப் பார்வையிட வருகை தந்த ஒன்றியக் குழுவிடம் - சீரமைப்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக தற்காலிக நிவாரணத் தொகையாக 7033 கோடி ரூபாயும், நிரந்தர நிவாரணத் தொகையாக 12,659 கோடி ரூபாயும் கோரப்பட்டதை பிரதமரிடம் தெரிவித்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அந்நிதியினை விரைந்து ஒதுக்கீடு செய்யுமாறு பிரதமர் அவர்களைக் கேட்டுக் கொண்டார்கள்.**

**ஒன்றியக் குழுவின் பாராட்டு! பிரதமரிடம் எடுத்துரைத்தார்!**

மேலும், ஒன்றிய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்கள் 7.12.2023 அன்று சென்னைக்கு வருகை தந்து, ‘மிக்ஜாம்’ புயல் பெருமழையால் ஏற்பட்ட பாதிப்புகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தது குறித்தும், ஒன்றிய அரசின் பல்துறை ஆய்வுக் குழு, 12.12.2023 மற்றும் 13.12.2023 ஆகிய நாட்களில் மழை வெள்ளப் பாதிப்புகளை ஆய்வு செய்து, அக்குழு தன்னுடன் ஆலோசனை மேற்கொண்டது குறித்தும்

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களை, நேற்று முன்தினம் (19.12.2023) புதுடெல்லியில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சந்தித்து, மிக்ஜாம் புயல் கனமழையால் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு விரைந்து நிதி ஒதுக்கீடு செய்திட வேண்டும் எனவும் – தென் மாவட்டங்களில் தற்போது பெய்த அதி கனமழையால் ஏற்பட்ட பாதிப்புகள், மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்து எடுத்துரைத்து, அப்பாதிப்புகளைச் சீரமைத்திடத் தேவையான நிதியினை விரைந்து ஒதுக்கீடு செய்திட வேண்டும் என்றும் கோரிக்கை மனுவினை (Memorandum) அளித்து, அதனை எடுத்துரைத்து உரையாடினார்.





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.12.2023) சென்னை, எழிலகத்தில் உள்ள வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக, தென் மாவட்டங்களில் பெய்த அதிகனமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும், மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்தும் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.கா.ப.கார்த்திகேயன், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் ஜி.லட்சுமிபதி ஆகியோருடன் விரிவாக ஆலோசனை மேற்கொண்டார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, பேரிடர் மேலாண்மை இயக்குநர் எஸ்.ஏ.இராமன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### சென்னை – எழிலகத்தில் உள்ள

## மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆய்வு!

### தென் மாவட்டங்களில் அதிகனமழையால் வெள்ள பாதிப்புகள் – மீட்புப் பணிகளை விரைந்து முடித்திட – அமைச்சர்கள், அதிகாரிகளுக்கு அறிவுரை!

**சென்னை, டிச. 21-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் தென் மாவட்டங்களில் அதி கனமழையால் ஏற்பட்டுள்ள வெள்ள பாதிப்புகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.**

அதன் விபரம் வருமாறு:–

தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் டிசம்பர் 17 மற்றும் 18 ஆகிய தேதிகளில் பெய்த அதிகனமழையின் காரணமாக ஏற்பட்ட வரலாறு காணாத வெள்ளப் பெருக்கினை எதிர்கொள்ள முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் பல்வேறு மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், நேற்று முன்தினம் (19.12.2023) இரவு, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களை புதுடெல்லியில் சந்தித்து, இம்மாதத்தில் தமிழ்நாட்டில் நிகழ்ந்துள்ள இரண்டு பெரிய வெள்ள பாதிப்புகளுக்குத் தேவைப்படும் நிதியினை தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக வழங்கிடக் கோரிக்கை மனு அளித்தார். இதனைத் தொடர்ந்து நேற்று (20.12.2023) காலை சென்னை திரும்பிய முதலமைச்சர் அவர்கள், சென்னை, எழிலகத்திலுள்ள, மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்குச் சென்று அங்கு தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் வெள்ள நிவாரணப் பணிகள் குறித்தும், மீட்புப் பணிகளின் தற்போதைய நிலை குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் மற்றும், சேத விவரங்கள் குறித்து முதலமைச்சர் அவர்களுக்கு விரிவாக எடுத்துரைத்தார்.

முதலமைச்சர் அவர்கள், தூத்துக்குடி மாவட்டத்தில் நிவாரண மையங்களில்

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 21-12-2023

# முழுத் தொகையையும் முழுமையாக வழங்குக!

மாண்புமிகு இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி அவர்களை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சந்தித்துள்ளார்கள். புயல் - மழை - வெள்ளம் ஆகியவற்றால் ஏற்பட்ட பாதிப்புகளை விளக்கி, இதனைச் சரி செய்ய ஒன்றிய அரசு உடனடியாக நிவாரணத் தொகையை வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார்கள்.

சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களும் - திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி, தென்காசி ஆகிய மாவட்டங்களும் - சீர் செய்யப்பட வேண்டிய மாவட்டங்களாக உள்ளன.

**பல்வேறு குடியிருப்புப் பகுதிகளில் வெள்ள நீர் சூழ்ந்து, வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்ததால் பொதுமக்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிப்பிற்குள்ளானது. கனமழையின் காரணமாக, சாலை, பாலம், நீர்நிலை உள்ளிட்ட பல்வேறு உட்கட்டமைப்புகளுக்கும் பெரிதளவு சேதம் ஏற்பட்டுள்ளது.**

**புயல் மழையால் சாலைகள், பாலங்கள், பள்ளிக் கட்டடங்கள், அரசு மருத்துவமனைகள் போன்ற பொதுக் கட்டமைப்புகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளைச் சீர்செய்திடவும், மழை வெள்ளத்தால் சேதமடைந்துள்ள டிரான்ஸ்பார்மர்கள், மின் கம்பங்கள், பழுதடைந்த துணை மின் நிலையங்கள் உள்ளிட்ட மின்சார உட்கட்டமைப்புகளைச் சீர் செய்திடவும், பாதிக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் குடிநீர்த் தொட்டிகள், தெருவிளக்குகள், கிராமச் சாலைகள் ஆகியவற்றைச் சீர் செய்திடவும் இழப்பீடுகள் கோரப்பட்டுள்ளது.**

**புயல் மழையால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் படகுகள், வலைகள் ஆகியவற்றிற்கு இழப்பீடுகள் வழங்கவும், சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்புகளை ஈடுசெய்திடவும், சாலையோர வியாபாரிகள் மற்றும் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கிடவும் இந்த நிதி கோரப்படுகிறது.**

**குடும்பங்களுக்கு வாழ்வாதாரங்களை மீட்கத் தேவையான உதவிகளை வழங்கவும் - பல்வேறு வகையான சமூக உட்கட்டமைப்புகளை மீட்டுருவாக்கம் செய்யவும் இந்த நிதி கோரப்படுகிறது.**

வாழ்வாதாரம் இழந்த மக்களுக்கு குடும்பத்துக்கு 6 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். கடந்த 17 ஆம் தேதியில் இருந்து 6 ஆயிரம் கொடுக்கும் பணி தொடங்கி விட்டது. ஒன்றிய அரசிடம் இருந்து நிதி வரும் வரை காத்திருக்காமல் மாநில அரசே நிதி வழங்கலைத் தொடங்கி விட்டது. இதற்கு மட்டும் 1,486 கோடி ரூபாயை மாநில அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இது 24 லட்சத்து 25 ஆயிரம் குடும்பங்களுக்குப் பயனளிக்கும் வகையில் அமைந்துள்ளது. இவை போக பல்வேறு இழப்புகளைச் சந்தித்தவர்களுக்கு வழங்கப்படும் நிதியையும் முதலமைச்சர் அவர்கள் உயர்த்தி இருக்கிறார்கள்.

**உயிர் இழந்தவர் குடும்பத்துக்கு ரூ.5 லட்சம் - சேதம் அடைந்த குடிசைகளுக்கு ரூ.8 ஆயிரம் - பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.17 ஆயிரம் - பல்லாண்டு பயிர்கள், மரங்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.22 ஆயிரத்து 500 - மானாவாரி பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.8,500 எருது, பசு உயிரிழந்து இருந்தால், ரூ.37 ஆயிரத்து 500 - ஆடு உயிரிழந்து இருந்தால் 4 ஆயிரம் - கட்டுமரங்கள் முழுமையாகச் சேதம் அடைந்திருந்தால், ரூ.50 ஆயிரமும், பகுதி அளவு சேதம் அடைந்திருந்தால் ரூ.15 ஆயிரமும் - வல்லம் வகை படகுகளுக்கு ஒரு லட்சமும், இயந்திரப் படகுகளுக்கான இழப்பீடாக ரூ.7.50 லட்சமும், வலைகளுக்கு ரூ.15 ஆயிரமும் - என இழப்பீடுகளை அனைத்துத் தரப்பினருக்கும் தர முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இவை அனைத்தும் பெருமளவு நிதியை உள்வாங்கும் அறிவிப்புகள் ஆகும்.**

**‘மிக்ஜாம்’ புயல் மழையினால் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பள்ளிவளாகங்களைச் சுத்தம் செய்ய ஒரு கோடியே 90 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கல்லூரிகளைச் சுத்தம் செய்ய ஒரு கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவை அனைத்தையும் உள்ளடக்கித் தான் நிதியைக் கோரியுள்ளார் முதலமைச்சர் அவர்கள்.**

சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் சீரமைப்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக தற்காலிக நிவாரணத்தொகையாக 7033 கோடி ரூபாயும், நிரந்தர நிவாரணத்தொகையாக 12,659 கோடிரூபாயும் முதலமைச்சர் அவர்கள் கோரி உள்ளார்கள்.

திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி மாவட்டங்களில் ஏற்பட்ட பாதிப்புகள் இன்னும் முழுமையாக அளவிடப்படவில்லை. எனவே, அவசர நிவாரண நிதியாக ரூ.2 ஆயிரம் கோடி தர வேண்டும் என்றும் முதலமைச்சர் அவர்கள் பிரதமரிடம் கோரியுள்ளார்கள். ஆக மொத்தம் 21 ஆயிரத்து 692 கோடி ரூபாய் தமிழ்நாடு அரசால் ஒன்றிய அரசிடம் கேட்கப்பட்டுள்ளது. இத்தொகையை முழுமையாக ஒன்றிய அரசு வழங்க வேண்டும். வழங்கினால்தான் மக்களுக்கு நிவாரணத் தொகையையும் வழங்க முடியும். உள்கட்டமைப்புகளையும் சீர்செய்ய முடியும்.

“மிக்ஜாம் புயல் கனமழையால் சென்னை மற்றும் சுற்றுப்புற மாவட்டங்களில் கடந்த 47 ஆண்டுகளாக இல்லாத கனமழையால் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்பையும், தென் மாவட்டங்களில் தற்போது வரலாறு காணாத வகையில் 100 ஆண்டுகள் இல்லாத கனமழை பெய்ததால் ஏற்பட்ட பாதிப்புகளையும் கருத்தில் கொண்டு, தேசியப் பேரிடராக அறிவிக்க வேண்டும்” என்றும் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களிடம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்கள். இதனையும் ஒன்றிய அரசு அறிவிக்க வேண்டும்.

தமிழ்நாடு அரசின் மக்கள் பணிகளில் குறை கண்டுபிடித்துக் கொண்டிருக்கும் அ.தி.மு.க. - பா.ஜ.க. போன்ற கட்சிகள், ஒன்றிய அரசிடம் இருந்து நிதியைப் பெற்றுத் தருவதில் அக்கறை காட்ட வேண்டும்.

●●



புதுடெல்லி – அசோகா ஓட்டலில், நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற ‘இண்டியா’ கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் – அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் திருமதி. சோனியா காந்தி அவர்களும், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும் உரையாடிய போது எடுத்த படம். நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு உடன் உள்ளார்.

### 141 எம்.பி.க்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டது

# ஜனநாயகத்தின் குரல்வளையை நெரிக்கும் செயல்!

## நாடாளுமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டம்! திருமதி சோனியா காந்தி குற்றச்சாட்டு!

**புதுடெல்லி, டிச.21-**

**நாடாளுமன்றத்தில் இருந்து சஸ்பெண்ட் செய்யப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து, காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பி.க்கள் நாடாளுமன்ற வளாகத்தினுள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.**

**141 எம்.பி.க்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருப்பது ஜனநாயகத்தின் குரல் வளையை நெரிக்கும் செயல் என்று திருமதி சோனியா காந்தி குற்றம் சாட்டினார்.**

நாடாளுமன்றத்தில் புகைக் குண்டு வீசப்பட்ட விவகாரம் குறித்து பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா ஆகியோர் விளக்கம் அளிக்க வேண்டும் என வலியுறுத்திய எதிர்க் கட்சி எம்.பி.க்கள் 141 பேர் கூட்டத்தொடர் முழுவதும் சஸ்பெண்ட் செய்யப்பட்டனர்.

இந்த சஸ்பெண்ட் உத்தரவை ரத்து செய்யக் கோரி, நேற்று காலை நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள காந்தி சிலை அருகே எதிர்க்கட்சி எம்.பி.க்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் காங்கிரஸ் நாடாளுமன்ற குழுத்தலைவர் சோனியா காந்தி, காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, காங்கிரஸ் முன்னணி தலைவர் ராகுல்காந்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தி.மு.க. எம்.பிக்களும் இந்த போராட்டத்தில் கலந்து கொண்டு முழக்கங்களை எழுப்பினர்.

**முழக்கங்களை எழுப்பினர்**

காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பி.க்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதற்கிடையே, சஸ்பெண்ட் செய்யப்பட்ட எதிர்க்கட்சி எம்.பி.க்கள் காந்தி சிலையில் இருந்து பேரணியாகச் சென்று மக்கார் நுழைவு வாயிலில் அமர்ந்தபடி முழக்கங்களை எழுப்பினர்.

இதைத்தொடர்ந்து நாடாளுமன்ற வளாகத்தில், காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தலைமையில் இந்தியா கூட்டணி எம்.பி.க்களின் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் 141 எம்.பி.க்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டது, அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்பது உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் ஆலோசிக்கப்பட்டன.

இந்த கூட்டத்தில் பேசிய சோனியா காந்தி, மகளிர் இட ஒதுக்கீடு மசோதா நிறைவேற்றப்பட்டிருப்பது கண்துடைப்பு என கூறினார். இந்த அரசால் 141 எம்.பி.க்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருப்பது ஜனநாயகத்தின் குரல்வளையை நெரிக்கும் செயல் என்றும் நாடாளுமன்ற காங்கிரஸ் குழு தலைவர் சோனியா காந்தி கூறியுள்ளார்.

### புயல் - மழை வெள்ளத்தால் பெருமளவிற்கு பாதிக்கப்பட்டுள்ள

# தமிழ்நாட்டுக்கு நிவாரண நிதி வழங்குவதில் - ஒன்றிய அரசு ஓரவஞ்சனை!

## புதுடெல்லியில் திருச்சி சிவா எம்.பி. பேட்டி!

**புதுடெல்லி,டிச.21-**

**நாடாளுமன்ற மாநிலங்களவையில் இருந்து நேற்று காலை, கழக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்த பின்னர் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த மாநிலங்களவை கழகக் குழுவின் தலைவர் திருச்சி சிவா, “கடும் புயல், மழை வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள தமிழ்நாட்டுக்கு நிவாரண நிதி வழங்குவதில் ஒன்றிய பா.ஜ.க. அரசு ஓரவஞ்சனையுடன் செயல்படுகிறது” என்று குற்றஞ்சாட்டினார்.**

புதுடெல்லியில் தி.மு.க. மாநிலங்களவைக் குழுத் தலைவர் திருச்சி சிவா, நேற்று செய்தியாளர்களிடம் பேசுகையில், குறிப்பிட்டதாவது:-

ஒரே நாடு - ஒரே கட்சி - ஒரே மதம் என்பது போல நாடாளுமன்றம் என்பது ஒரே கட்சிக்கு உரியதாக ஆகிவிட்டது. நாடாளுமன்றத்தில் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பேசுவதும் அதை தலைவர் கேட்பதும், ஆளுங்கட்சி உறுப்பினர்களை மட்டுமே சன் செட் தொலைக்காட்சி காட்டுவதும் ஆகிவிட்டது. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசுவதற்கு ஒலிபெருக்கியும் தருவதில்லை தொலைக் காட்சியில், நாங்கள் குரலெழுப்புவதை காட்டுவதுமில்லை.

தமிழகத்திற்கு நிவாரண நிதி தருவதில் ஒன்றிய அரசு ஓரவஞ்சனை செய்கிறது. இதுவே குஜராத்தில் வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டால் உடனே ஆயிரம் கோடி ரூபாய் விடுவிக்கிறார்கள். ஆனால் தமிழகத்திற்கு வெள்ளப் பாதிப்பு நிவாரணத் தொகையிலிருந்து உரிய பங்கினைக் கூட குறைவாகத்தான் கொடுத்துள்ளனர். வழக்கமாக பேரிடர் நிவாரண நிதியிலிருந்து விடுவிப்பது போல்தான் விடுவித்திருக்கிறார்கள்



**குரல் வளையை நசுக்கப் பார்க்கிறார்கள்!**

டிசம்பர் 13ஆம் தேதி நடந்த சம்பவம் குறித்து பிரதமர் மோடியும், மத்திய உள்துறை அமைச்சரும் நாடாளுமன்றத்தில் இது குறித்து விளக்கம் தரமறுக்கிறார்கள். மாறாக, இதுகுறித்து வெளியே பேசுகிறார்கள். நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் எல்லாம் ஏதோ பொறுப்பற்ற செயலைச் செய்வது போல் சித்தரிக்கிறார்கள். இதனால் எதிர்க்கட்சிகளின் உரிமைகள் எல்லாம் பறிக்கப்படுகிறது .

இரு அவைகளிலும், மயக்கம் வரும் அளவிற்கு குரல் எழுப்பி உள்ளோம். ஆனால் அரசு அதற்குச் செவி சாய்க்கவில்லை. அதனால் இன்று வெளிநடப்பு செய்துள்ளோம். நாடாளுமன்றத்தை தவறான திசையில் கொண்டு சென்று எங்கள் குரல் வளையை நசுக்கப் பார்க்கிறார்கள், குடியரசு துணைத் தலைவரைப் போல் எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் நையாண்டி செய்து காட்டிய சர்ச்சைக்கு - வெளியில் நடந்த ஒரு பிரச்சினைக்கு பாராளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர், அவையில் அறிக்கை வாசிக்கிறார்.

**உலகளவில் இந்தியாவின் பிம்பம் சிதைந்து போயிருக்கும்!**

அவைக்கு வெளியில் நடந்ததை இவ்வளவு முக்கியமாக எடுத்துக் கொள்ளும் ஒன்றிய அரசு, ஏன் அவைக்கு உள்ளே நடைபெற்ற மிகப்பெரிய பாதுகாப்புக் குறைபாட்டை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளவில்லை.

ஒருவேளை நாடாளுமன்ற அத்துமீறல் சம்பவத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஏதும் நடந்திருந்தால் உலக அளவில் இந்தியாவின் பிம்பம் சிதைந்து போயிருக்கும். எனவே ஒன்றிய அரசு தங்களின் கடமையைப் புறக்கணித்து மக்களை திசை திருப்பவே இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

இவ்வாறு திருச்சி சிவா எம்.பி. குறிப்பிட்டார்.

### தேசிய பேரிடர் மேலாண்மைக்குழு ஆலோசகர் தலைமையிலான குழுவினர் ஆய்வு!

# தூத்துக்குடியில் வெள்ளப் பாதிப்புகளை ஒன்றியக் குழுவினர் பார்வையிட்டனர்!

## மாநகராட்சி அதிகாரிகளுடன் ஆலோசனை!

*தூத்துக்குடி, டிச.21-*

*தூத்துக்குடி மாவட்டத்தில் வெள்ளப் பாதிப்புகளை பார்வையிட வந்துள்ள ஒன்றிய அரசு குழுவினர், நேற்று தூத்துக்குடி மாநகராட்சி அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டனர்.*

*திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி ஆகிய 4 மாவட்டங்களில் கடந்த 17, 18 ஆகிய தேதிகளில் பெய்த அதி கனமழை காரணமாக கடுமையாக பாதிக்கப்பட்டன. குறிப்பாக தூத்துக்குடி மற்றும் நெல்லை மாவட்டங்கள் பெரும் பாதிப்பிற்குள்ளாகின. இந்த நிலையில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட, தேசிய பேரிடர் மேலாண்மை குழு ஆலோசகர் கே.பி.சிங் தலைமையிலான 5 பேர் கொண்ட ஒன்றியக் குழு நேற்று முன்தினம் மதுரை வந்தனர்.*

*இந்த குழுவில், சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை போக்குவரத்துத் துறை அதிகாரி விஜயகுமார், ஜல்சக்தி அமைச்சக அதிகாரி ஆர்.தங்கமணி, ஐதராபாத் ஒன்றிய வேளாண் நிறுவன இயக்குனர் பொன்னுசாமி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். தொடர்ந்து, நேற்று தூத்துக்குடி வந்த ஒன்றியக் குழுவினர், தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகத்தில் அனைத்துத் துறை அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டனர்.*

*அதனைத் தொடர்ந்து ஒன்றியக் குழுவினர் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டனர். இன்றும் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிடுகின்றனர்.*

## நாடாளுமன்றத்தில் எம்.பி.க்கள் இடைநீக்கத்தைக் கண்டித்து - நாளை

# ‘இந்தியா’ கூட்டணி சார்பில் - நாடு தழுவிய போராட்டம்!

## புதுடெல்லியில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானம்! அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே அறிவிப்பு!

புதுடெல்லி, டிச. 21 -

**நாடாளுமன்றத்தில் எம்.பி.க்கள் இடைநீக்கத்தை கண்டித்து ‘இந்தியா’ கூட்டணி சார்பில் நாளை (டிசம்பர் 22) நாடு தழுவிய அளவில் போராட்டம் நடத்தப்படும் என அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.**

புதுடெல்லியில் இந்தியா கூட்டணியின் 4வது ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் (டிச. 19) நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் இந்தியா கூட்டணி சார்பில் 28 கட்சிகள் பங்கேற்றன. தமிழ்நாட்டிலிருந்து தி.மு.க. சார்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டார்.

சமீபத்தில் நடந்து முடிந்த 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தலில், 4 மாநிலங்களில் காங்கிரஸ் தோல்வியைச் சந்தித்த பிறகு முதல்முறையாக நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் தொகுதிப் பங்கீடு, பா.ஜ.க.வுக்கு எதிரான தேர்தல் வியூகம் உள்ளிட்டவை குறித்து விவாதிக்கப்பட்டது.



‘இண்டியா’ கூட்டணியில் 4-வது ஆலோசனைக் கூட்டம் புதுடெல்லியில், நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது. இக்கூட்டத்தில் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, திருமதி. சோனியா காந்தி, தமிழ்நாடு முதலமைச்சரும் கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின், தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவார் மற்றும் ‘இண்டியா’ கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்றனர்.

சுமார் 3 மணிநேரம் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே பேசியதாவது : -

“இந்தியா கூட்டணி கட்சிகளின் கூட்டம் சுமூகமாக நடந்தது. 3 மணி நேரம் நடைபெற்ற கூட்டத்தில் அனைத்து விஷயங்களையும் விவாதித்தோம்.

எதிர்க்கட்சி எம்.பி.க்கள் இடைநீக்கம் செய்யப்பட்டதைக் கண்டித்து இந்தியா கூட்டணி தலைவர்கள் தீர்மானம் நிறைவேற்றியுள்ளோம். இந்திய வரலாற்றில் 151 எம்.பி.க்கள் இடைநீக்கம் செய்யப்பட்டது இதுவே முதல்முறை. இதற்கு எதிராக நாங்கள் போராடுவோம். இது மிகவும் தவறான அணுகுமுறை. இதற்கு எதிராக இந்தியா கூட்டணி கட்சிகள் ஒன்றிணைந்துள்ளன. எம்.பி.க்கள் இடைநீக்கம் செய்யப்பட்டதைக் கண்டித்து நாளை (டிசம்பர் 22ஆம் தேதி) நாடு தழுவிய அளவில் போராட்டம் நடத்தப்படும்.

கட்டட திறப்பு விழாவுக்குச் செல்லும் பிரதமர் நாடாளுமன்றம் வர மறுக்கிறார்.

நாடாளுமன்றத்தில் மர்ம நபர்கள் புகுந்து அத்துமீறலில் ஈடுபட்டது தொடர்பாக பிரதமர், உள் துறை அமைச்சர் ஆகியோரிடம் விளக்கம் கேட்பதில் என்ன தவறு உள்ளது?”

இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

## வாக்குப் பதிவு ஒப்புகைச்சீட்டும் எண்ணப்பட வேண்டும்!

**‘இந்தியா’ கூட்டணிக் கட்சிக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட மற்றுமோர் தீர்மானம் வருமாறு:**

**“வாக்குப் பதிவு எந்திரத்தின் நம்பகத்தன்மை குறித்த பல்வேறு வல்லுநர்களும் அரசியல் கட்சிகள் சந்தேகத்தை எழுப்பியுள்ளனர். இதுகுறித்து அதனுடைய நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு கோரிக்கை மனுவுடன் இந்தியா கூட்டணி கட்சிகளின் பிரதிநிதிகள் இந்திய தேர்தல் ஆணையத்தைச் சந்தித்து கோரிக்கை மனு அளிக்கச் சென்றனர்.**

**ஆனாலும் தேர்தல் ஆணையம் இவர்களைச் சந்திக்க பெரும் தயக்கம் காட்டியது. இந்தியா கூட்டணியின் கோரிக்கை மிகச் சாதாரணமான ஒன்றுதான். மின்னணு இயந்திரத்தில் வாக்குப்பதிவு முடிந்தவுடன் வருகிற ஒப்புகைச் சீட்டு வாக்காளர்கள் கையில் வழங்கப்பட வேண்டும்.**

**அவர்கள் அதைச் சரிபார்த்த பிறகு, அது தனி வாக்குப் பெட்டியில் போடப்பட வேண்டும். அதனை 100 சதவீதம் எண்ணுவதை உறுதி செய்ய வேண்டும்.”**

## பிரதமரிடம் - முதல்வர் மு.க.ஸ்டாலின் கோரிக்கை மனு... முதல் பக்கத் தொடர்ச்சி

எடுத்துரைத்ததுடன், தமிழ்நாடு அரசு மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை விரைந்து மேற்கொண்டதற்கு அக்குழு பாராட்டு தெரிவித்ததையும் குறிப்பிட்டு, சீரமைப்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக தற்காலிக நிவாரணத் தொகையாக 7033 கோடி ரூபாயும், நிரந்தர நிவாரணத் தொகையாக 12,659 கோடி ரூபாயும் கோரப்பட்டதைத் தெரிவித்து, அந்நிதியினை விரைந்து ஒதுக்கீடு செய்யுமாறு இந்தியப் பிரதமர் அவர்களிடம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

மேலும், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி மாவட்டங்களில் கடந்த இரண்டு நாட்களாக (டிசம்பர் 17 மற்றும் 18) பெய்த கனமழை முதல் அதி கனமழையால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து விளக்கி, அம்மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்தும் எடுத்துரைத்தார்.

**மிக்ஜாம் புயல் கனமழையால் சென்னை மற்றும் சுற்றுப்புற மாவட்டங்களில் கடந்த 47 ஆண்டுகளாக இல்லாத கனமழையால் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்பையும், தென் மாவட்டங்களில் தற்போது வரலாறு காணாத வகையில் 100 ஆண்டுகள் இல்லாத கனமழை பெய்ததால் ஏற்பட்ட பாதிப்புகளையும் கருத்தில் கொண்டு, தேசியப் பேரிடராக அறிவிக்க வேண்டும் என்று இந்தியப் பிரதமர் அவர்களிடம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார். எனவே, பேரிடர் நிவாரண நிதியிலிருந்து 2000 கோடி ரூபாயை அவசர நிவாரண நிதியாக வாழ்வாதார உதவிக்காகவும், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி மாவட்டங்களின் தற்காலிக சீரமைப்புப் பணிகளுக்காகவும் வழங்கிட வேண்டும் என்றும் இந்தியப் பிரதமர் அவர்களிடம் கோரிக்கை விடுத்தார்.**

இச்சந்திப்பின்போது, நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு அவர்கள் உடனிருந்தார்.

இவ்வாறு அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மழை வெள்ளச் சேதம் - நிவாரணப் பணிகள் குறித்து ஆய்வு!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் - இன்று தூத்துக்குடி செல்கிறார்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, டிச. 20–

**மத்தியக் குழுவினர் தூத்துக்குடியில் ஆய்வுக்கு வருவதால் – முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் தூத்துக்குடிக்குச் சென்று ஆய்வு மேற்கொள்கிறார் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.**

அதன் விபரம் வருமாறு:-

தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 4 மாவட்டங்களில் டிசம்பர் 17 மற்றும் 18 ஆகிய தேதிகளில் பெய்த கனமழையின் காரணமாக கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதனை எதிர்கொள்ளவும், மக்களுக்குத் தேவையான மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவும் அமைச்சர் பெருமக்கள் மற்றும் இந்திய ஆட்சிப்பணி அலுவலர்களும் உடனடியாக பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்க முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருந்தார்.

மேலும், அப்பகுதிகளில் மாநில பேரிடர் மீட்புக் குழு, தேசிய பேரிடர் மீட்புக் குழு, தீயணைப்புத் துறை, காவல் துறையினர் மற்றும் அனைத்து அரசுத் துறைகளுடன் இணைந்து ஒருங்கிணைந்த முறையில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, பாதிக்கப்பட்ட மக்கள் மீட்கப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டு வருகிறார்கள். தூத்துக்குடி மாவட்டத்தில் மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இந்தச் சூழ்நிலையில் முன்னதாக நேற்று (20.12.2023) தூத்துக்குடிக்குச் செல்வதாக அறிவித்திருந்த முதலமைச்சர் அவர்கள், மத்தியக் குழு நேற்று தூத்துக்குடி மாவட்டத்தில் ஆய்வு மேற்கொள்வதால், மாவட்ட நிர்வாகம் அவர்களுக்கு உடனிருக்க வேண்டிய நிலையைக் கருத்தில்கொண்டு, நேற்று இரவு மதுரை சென்று இன்று (21.12.2023) தூத்துக்குடியில் ஆய்வு மேற்கொள்கிறார்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இனமானப் பேராசிரியர் அவர்களின் 102-வது பிறந்தநாளான நேற்று முன்தினம், நெல்லையில், பேராசிரியரின் திருவுருவப் படத்திற்கு, கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மலரஞ்சலி செலுத்தினார். நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் கழக முன்னணியினர் உடன் உள்ளார்கள்.

## புதுச்சேரியில் இனமானப் பேராசிரியர் பிறந்த நாள் விழா!

*புதுச்சேரி, டிச.21-*

*தி.மு.க. முன்னாள் பொதுச்செயலாளர் மறைந்த பேராசிரியர் அவர்களின் பிறந்த நாள் விழா புதுச்சேரி மாநில தி.மு.க. சார்பில் நேற்று முன்தினம் கடைப் பிடிக்கப்பட்டது.*

*ஸ்போர்த் வீதியில் உள்ள தி.மு.க. தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற பிறந்த நாள் நிகழ்ச்சியில் மாநில கழக அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சிவா தலைமையில் தி.மு.க.- வினர் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த பேராசிரியர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.*

*இந்த நிகழ்ச்சியில், அவைத் தலைவர் எஸ்.பி. சிவக்குமார், மாநில துணை அமைப்பாளர் வி. அனிபால் கென்னடி, எம்.எல்.ஏ., மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல். சம்பத் எம்.எல்.ஏ., துணை அமைப்பாளர் அ. தைரியநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பூ. மூர்த்தி, கே.எம்.பி. லோகையன், ஜே.வி.எஸ்.ஆறுமுகம், டி.அருட்செல்வி, பொதுக் குழு உறுப்பினர்கள் வெ. ராமசாமி, தங்கவேலு, சி. கோபால், வே. கார்த்திகேயன், பெ.வேலவன், ஆர். கோகுல், ஆர். ரவீந்திரன், டி.செந்தில்வேலன், ப. இளம்பரிதி, பெ. பழநி, மு. பிரபாகரன், எஸ். எஸ். செந்தில்குமார், வே. மாறன், நா. கோபாலகிருஷ்ணன் கலந்து கொண்டனர்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே. சண்முகநாதன்

### டிசம்பர் 21 (2021)



**இளமைப் பருவத்திலிருந்தே முத்தமிழறிஞர் கலைஞர்மீது மாறா அன்பு கொண்டு, அவர் மறையும் காலம்வரை அவர் ‘நிழலாக’ வாழ்ந்தவர். கழகம் ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும், மாற்றுக் கட்சி ஆட்சியாளர்கள் தன் மீது பழிவாங்கும் நடவடிக்கைக்கு உத்தரவிட்டாலும் கலைஞர் அவர்களின் அருகிலேயே இருந்தவர். குடும்பத்தாரைவிட அதிக நேரம் கலைஞர் அருகில் இருக்கக்கூடிய வாய்ப்பைப் பெற்றவர்.**

**கலைஞரின் மனம் நினைப்பதை, உதடுகள் உச்சரிப்பதற்கு முன்பாகவே நிகழ்த்தி முடிப்பவர். கலைஞரின் மனக்குரலை – மனதின் எதிரொலியை எழுத்து வடிவத்தில் மொழிபெயர்க்கக் கூடியவராக இருந்தவர். “இந்தப் பிறவியே கலைஞருக்கானது” என்று சொல்லி, அரைநூற்றாண்டு காலம் கலைஞரின் உதவியாளராக இருந்ததோடு, அவரின் அன்புக்குரியவராகி, அவருக்குச் சுமைதாங்கியாக – இடிதாங்கியாக இருந்தவர்.**

**“நான் உறைந்து நிற்கிறேன். அவரின் அன்றலர்ந்த முகம் தவிர வேறெதுவும் என் மனதில் தோன்றவில்லை. உடன்பிறவா அண்ணனே.. உடன்பிறப்புகளின் தலைவரிடம் சென்றுவிட்டவரே! எங்களில் நீங்கள் என்றென்றும் வாழ்கிறீர்கள். எங்கள் ‘இயக்க’த்தில் நீங்கள் குருதியோட்டமாகக் கலந்திருக்கிறீர்கள்.” என்று கழகத் தலைவர் அவர்கள் அவரது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.12.2023) சென்னை, எழிலகத்தில் உள்ள வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று, திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி மாவட்டங்களில் பெய்த அதி கனமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும், குறிப்பாக கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்தும், முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு உணவு, மருந்து உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் தங்குதடையின்றி வழங்கப்படுவது குறித்தும் ஆய்வு மேற்கொண்டார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க. பணீந்திர ரெட்டி, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, பேரிடர் மேலாண்மை இயக்குநர் எஸ்.ஏ. இராமன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



இனமானப் பேராசிரியர் அவர்களின் 102 வது பிறந்தநாளையொட்டி, கழகத் தலைமை அலுவலகமான சென்னை – அண்ணா அறிவாலயத்தில், பேராசிரியர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு, கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் அவர்கள் மலரஞ்சலி செலுத்தினார். கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, தலைமை நிலைய செயலாளர் பூச்சி எஸ்.முருகன், மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் ஈரோடு இறைவன், பகுதிச் செயலாளர் மா.பா.அன்புதுரை, வட்டச் செயலாளர் ராமு உள்ளிட்டோர் அப்போது உடனிருந்தனர்.

### தே.மதியழகன் எம்.எல்.ஏ. முன்னிலை!

# கிருஷ்ணகிரியில் ‘மக்களுடன் முதல்வர்’ திட்டம்!

## அமைச்சர் அர.சக்கரபாணி துவக்கி வைத்தார்!

கிருஷ்ணகிரி, டிச. 21-

கிருஷ்ணகிரி நகராட்சி, மீனாட்சி மஹாலில், “மக்களுடன் முதல்வர்” திட்டத்தை உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, மாவட்ட ஆட்சித்தலைவர் சரயு, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்து, துறைவாரியாக அரங்குகள் அமைத்து பொதுமக்களிடம் மனுக்களை பெற்று கணினியில் பதிவேற்றம் செய்யும் பணிகளை பார்வையிட்டார்.

அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், விடியல் பயணம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப்பெண் திட்டம், இல்லம் தேடிக் கல்வி, இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48, நான் முதல்வன் போன்ற திட்டங்கள் அனைத்தும் மக்களுக்கு சேர்வதை உறுதிசெய்திட மாவட்டந்தோறும் “கள ஆய்வில் முதலமைச்சர்” என்ற திட்டத்தின் மூலம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேரடி களஆய்வு செய்தார்.

இதனை இன்னும் செம்மைப்படுத்திட பொதுமக்களின் தேவைகளும் அரசின் சேவைகளும் ஒரு குடையின்கீழ் சந்தித்து விரைவில் தீர்வுகள் கிடைக்கும் வகையிலும், ஏராளமான அரசு சேவைகள் அரசு அலுவலங்களை நாடிச்சென்று பெறுவதை தவிர்த்து அவர்களின் இல்லத்திலிருந்தே இணைய வழி மூலமாகவே விண்ணப்பிக்கும் வகையில் பல்வேறு சேவைகளை வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறது. விளிம்புநிலை மக்கள் மற்றும் விழிப்புணர்வு இல்லாத மக்கள், சேவைகளுக்கான இணைக்கப்பட வேண்டிய சான்றாவணங்கள் குறித்து போதிய விழிப்புணர்வு இல்லாத நிலையில் உள்ளோருக்கு உதவிடும் வகையிலும், அரசு சேவைகளை எளிதாக்கி அவர்களின் இருப்பிடத்திற்கே எடுத்துச் சென்று குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் வழங்கிடும் வகையில் “மக்களுடன் முதல்வர்” திட்டம் செயல்படுத்தப்படும் என தமிழ்நாடு முதல மைச்சர் அவர்கள் அறிவித்திருந்தார்கள்.

அதனைத்தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 18.12.2023 அன்று கோவை மாவட்டம், ஆவாரம்பாளையம், எஸ்.என்.ஆர். கல்லூரியில், “மக்களுடன் முதல்வர்” திட்டத்தை துவக்கி வைத்துள்ளார்கள். தொடர்ந்து, நமது கிருஷ்ணகிரி மாவட்டத்திலும், “மக்களுடன் முதல்வர்” திட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், கிருஷ்ணகிரி நகராட்சியில் 28, 29, 30, 31, 32, 33 ஆகிய வார்டுகளுக்குட்பட்ட பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டுள்ளது.

இத்திட்டம் நமது மாவட்டத்தில், ஒசூர் மாநகராட்சி, கிருஷ்ணகிரி நகராட்சி, 6 பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியம் ஆகிய இடங்களில் ஒன்பது நாட்கள் காலை 10 மணி முதல் மாலை 05.00 மணி வரை நடைபெற உள்ளது. இம்முகாம்களில் வழங்கப்படும் மனுக்களுக்கு 30 நாட்களுக்குள் தீர்வு காணப்படும்.

இத்திட்டத்தினால், மக்களுக்கான சேவைகள் அவர்களுக்கு அருகாமையில் வழங்குவது, தேவையற்ற அலைக் கழிப்புகளை தவிர்த்தல், குறிப்பாக விளிம்பு நிலை மக்கள் மாற்றுத்திறனாளிகள் வயது முதிர்ந்தோர்களுக்கு அவர்களைத்தேடி அரசு சேவைகளை வழங்குவது இதன் நோக்கமாகும்.

எனவே, பொதுமக்கள் தங்கள் பகுதியில் நடைபெறும் முகாம்களில் கலந்து கொண்டு தங்களது கோரிக்கை மனுக்களை சமர்ப்பித்து பயனடையலாம் என உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி தெரிவித்தார்.

பின்னர் கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் அரசு பொறியியல் கல்லூரி வளாகத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் 26 பயனாளிகளுக்கு ரூ.25 இலட்சத்து 40 ஆயிரத்து 694 மதிப்பில் திருமண நிதி உதவிகளை உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்குறள், வருவாய் கோட்டாட்சியர் பாபு, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் திருமதி. மணிமேகலை நாகராஜ், நகரமன்ற தலைவர் .பரிதா நவாப், நகரமன்ற துணைத் தலைவர் சாவித்திரி கடலரசு மூர்த்தி, மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், மாநில விவசாய அணி துணை செயலாளர் டேம். வெங்கடேசன் , மாவட்ட துணை செயலாளர் கோவிந்தசாமி , சந்திரன்

பொருளாளர் கதிரவன் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் செந்தில் பிரபாகரன் பொதுக்குழு உறுப்பினர்கள் அஸ்லாம் , நாகராசன், பாலன், கோதண்டன் , சித்ரா சந்திரசேகர்

பி.டி. அன்பரசன் , ஒன்றிய செயலாளர்கள் கோவிந்தன்,தனசேகரன் , மகேந்திரன் தேங்காய் சுப்பிரமணி, சாந்தமூர்த்தி ,ராஜேந்திரன், அறிஞர், நரசிம்மன், குண.வசந்தரசு ,எக்கூர் செல்வம், ரஜினி செல்வம், குமரேசன், பேரூர் கழக செயலாளர்கள் பாபு, தம்பிதுரை, வெங்கடப்பன் பாபு சிவகுமார் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# மாநில அவசர கால செயல்பாட்டு மையத்தில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆய்வு!

முதல் பக்கத் தொடர்ச்சி ...

தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுடன் வீடியோ கால் மூலமாக முகாம்களில் அவர்களுக்கு செய்து தரப்பட்டுள்ள வசதிகள் குறித்தும், வழங்கப்படும் உணவு மற்றும் மருத்துவ உதவிகள் குறித்தும் கேட்டறிந்தார்.

மேலும், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர்களுடனும், வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கே. பிரபாகர், மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி ஆகியோருடன் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்தும் காணொலி வாயிலாக ஆலோசனை மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, நிவாரண மையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளையும், மருத்துவ உதவிகளையும் குறைவின்றிச் செய்து கொடுக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

அத்துடன், சென்றடைய முடியாத நிலையில் உள்ள கிராமங்களில் உள்ள மக்களின் நிலை மற்றும் அவர்களை மீட்க என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பது குறித்தும் கேட்டறிந்தார். அப்பணிகளை விரைவுபடுத்தவும் கேட்டுக் கொண்டார்.

தண்ணீர் சூழ்ந்துள்ள கிராமங்களில் சிக்கியுள்ள மக்களுக்கு உணவு வழங்கல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்தவும், மாவட்ட ஆட்சியர்களை முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார். மேலும், மீட்புப்பணிகளில் ஈடுபட்டுள்ள அமைச்சர் பெருமக்கள் மற்றும் அதிகாரிகள் அனைவரையும், பணிகள் அனைத்தையும் விரைந்து முடிக்குமாறு அறிவுரை வழங்கினார்.

முன்னதாக, - பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோரை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் நிலையைக் கேட்டறிந்து உரிய அறிவுரைகளை வழங்கினார்.

முதலமைச்சர் அவர்களின் ஆய்வின்போது, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க. பணீந்திர ரெட்டி, கூடுதல் தலைமைச் செயலாளர்/வளர்ச்சி ஆணையர் நா. முருகானந்தம், உள்துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

### திண்டுக்கல் மருத்துவரிடம் லஞ்சம் வாங்கி கையும் களவுமாகப் பிடிபட்ட

# அமலாக்கத்துறை அதிகாரி அங்கித் திவாரியின் ஜாமீன் மனு தள்ளுபடி!

## உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவு!

திண்டுக்கல், டிச. 21-

திண்டுக்கல் மருத்துவரிடம் லஞ்சம் பெற்றபோது லஞ்ச ஒழிப்புத்துறையால் கைது செய்யப்பட்ட, அமலாக்கத்துறையின் மதுரை மண்டல இணை இயக்குநர் அங்கித் திவாரி மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இந்நிலையில், ஜாமீன் கோரி உயர்நீதிமன்ற மதுரை கிளையில் அங்கித் திவாரி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு விசாரணையின் போது, தமிழ்நாடு அரசின் தலைமை குற்றவியல் வழக்கறிஞர் ஹசன் முகமது ஜின்னா ஆஜராகி அங்கித் திவாரிக்கு ஜாமீன் வழங்கக் கூடாது என கடும் எதிர்ப்பு தெரிவித்தார்.

அங்கித் திவாரியின் மடிக்கணினியில் லஞ்சம் பெற்ற அமலாக்கத்துறையைச் சேர்ந்த 70க்கும் மேற்பட்டோரின் பெயர்கள் இருப்பதாகவும், அதனால், ஜாமீன் வழங்கக்கூடாது என்றும் லஞ்ச ஒழிப்புத்துறை சார்பில் நீதி மன்றத்தில் வாதிடப்பட்டது. இதனைப் பதிவு செய்த நீதிபதி சிவஞானம், அங்கித் திவாரியின் ஜாமீன் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளார்.







தூத்துக்குடி மாவட்டத்தில் பெய்துள்ள வரலாறு காணாத கனமழை காரணமாக, வெள்ளம் சூழ்ந்துள்ள முத்தாலம்மன் காலனி, ஸ்டேட் பேங்க் காலனி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்களை மீட்கின்ற பணிகளை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அமைச்சர்கள், அதிகாரிகள் அலுவலர்களுடன் இணைந்து ஒருங்கிணைத்தார். காவல்துறை தீயணைப்பு படை, கடலோர பாதுகாப்புக் குழுமம், பேரிடர் மீட்புக் குழுவினர் முழுவீச்சில் மீட்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். மேலும், நீர் சூழ்ந்துள்ள பகுதிகளில் வசிப்போருக்கு உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்ய அதிகாரிகள், அலுவலர்களை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தினார்.





தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் வெள்ளம் சூழ்ந்த நிலையில், அந்தப்பகுதிக்குச் சென்று அங்கு சிகிச்சை பெற்று வருவோர் மற்றும் அவர்களின் குடும்பத்தாரிடம் அங்குள்ள நிலை குறித்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கேட்டறிந்தார். மேலும், வெள்ளம் காரணமாக சிகிச்சை தடைபடாமல் இருப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள மருத்துவமனைப் பணியாளர்களைக் கேட்டுக் கொண்டார். மேலும், நோயாளிகள் சிகிச்சைக்காக வருகிற போதும், சிகிச்சை முடிந்து திரும்புகிற போதும் அவர்கள் வெள்ள நீரில் சிக்காமல் பாதுகாப்பாக வெளியேறும் வகையில் படகினை வைத்திருக்கும்படி அரசு அதிகாரிகளை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கேட்டுக் கொண்டார். அமைச்சர்கள் கே.என்.நேரு, பி.கீதா ஜீவன், ஆர்.எஸ்.இராஜ கண்ணப்பன் உள்ளிட்டோர் உடன் உள்ளார்கள்.



நெல்லை மாநகராட்சி மைய அலுவலகத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே. என்.நேரு,நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ராஜகண்ணப்பன் ஆகியோர் நெல்லை மாவட்டத்தில் மழை வெள்ளப் பாதிப்பு இடங்கள் மற்றும் மீட்பு பணிகள் குறித்து ஆய்வு செய்தார்கள். இக்கூட்டத்தில் மாவட்ட கண் காணிப்பு அலுவலர் மரு.இரா.செல்வராஜ்,நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மைதீன்கான்,மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், மாநக ராட்சி மேயர் சரவணன்,மாநகராட்சி ஆணையாளர்கள் தாக்கரே சுபம் ஞானதேவ்ராவ் (நெல்லை) சிவ கிருஷ்ணமூர்த்தி (ஈரோடு) அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. மாநகர செயலாளர் சுப்பிரமணியன்,துணை மேயர் ராஜ்,மாநில வர்த்தக அணி இணை செயலாளர் மாலை ராஜா,மாவட்ட துணை செயலாளர் சுரேஷ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பிரபாகரன்,பகுதி செயலாளர்கள் சுப்பிரமணியன்,நமச்சிவாயம், அன்டன் செல்லத்துரை உள்பட பட பலர் உள்ளனர்.

### பெருமழை, புயல் வெள்ளத்திலிருந்து

# மக்களைப் பாதுகாப்பதில் முதல்வர் முன்னின்று பணியாற்றுகிறார்!

## சிவகங்கையில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேட்டி!

சிவகங்கை, டிச. 21-

சிவகங்கையில் மக்களுடன் முதல்வர் திட்டத்தினை துவக்கி வைத்த கூட்டுறவு துறை அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

கடந்த நான்காம் தேதி சென்னையில் ஏற்பட்ட தொடர்மழை வெள்ளத்தினால் நான்கு மாவட்டங்கள் பாதிக்கப்பட்டன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை முதல்வர் தலைமையில் அரசு அதிகாரிகள் அமைச்சர்கள் உடனடியாக மேற்கொண்டார்கள்.

முன்கூட்டியே வெள்ள எச்சரிக்கைதடுப்பு பணிகள் நடவடிக்கைகள் மேற் கொள்ளப் பட்டதால் பெருமளவில் உயிர்ச்சேதங்கள் தவிர்க்கப்பட்டது. முதல்வர் முன்னெச்சரிக்கையாக களத்தில் நின்று பணியாற்றியதால் இத்தகைய பேரிடரிலிருந்து மக்கள் காப்பாற்றப் பட்டார்கள். முதல்வரின் வெள்ள நிவாரண பணிகள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பார்வையிடவந்த ஒன்றிய அரசு குழுவினர் நேரில் பார்வையிட்டு பாதிக்கப் பட்ட மக்களை சந்தித்த பின் தமிழக அரசின் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்காக பாராட்டுதெரிவித்து உள்ளார்கள்.

தொடர்ந்து நிவாரண உதவித் தொகையாக முதல்வரால் அறிவிக்கப் பட்ட ருபாய்6000 வழங்கப்பட்டு வருகின்றது. இதேபோல் தென் மாவட்டங்களில் கடந்த இரண்டு நாட்களாக கடும்மழை பெய்து வருகிறது. அந்த மழையிலிருந்து மக்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு முதல்வர் அவர்கள் அதிகாரிகளுக்கும் அமைச்சர்களுக்கும் உத்தரவிட்டுள்ளார்கள்.

பெருமழை, புயல், வெள்ளத்திலிருந்து மக்களை பாதுகாப்பதில் முதல்வர் முன்னின்று பணியாற்றுகிறார். அதிகாரிகள் அமைச்சர்களுக்கு பல்வேறு அறிவுரைகளை வழங்கி உள்ளார். தி.மு.க .ஆட்சிக்கு வந்தால் மழை பெய்யாது என்று கூறி வந்தார்கள். அதனை பொய்ப்பித்திடும் வகையில் இயற்கை தமிழக முதல்வர் தளபதி அவர்களின் நல் ஆட்சியைப் பாராட்டிடும் வகையில் நன்றாக அதிகமாக மழை பெய்து வருகிறது. மழை தேவையான ஒன்று. மழை சற்று கூடுதல் என்றாலும் பாதிப்பிலிருந்து மக்களை காப்பாற்றுவதில் இந்த அரசு தீவிரமாக முன்னுரிமை கொடுத்து செயல்பட்டு வருகின்றது. நிவாரண உதவித்தொகை அதிகரிக்க வேண்டும் என்று பல்வேறு கட்சியினர் கோரி வருகிறார்கள்.

2015 ல்ஏற்பட்ட வெள்ளத்தில் உயிர் சேதம் ஏற்பட்டது. அவர்கள் அளித்த நிவாரணத் தொகை என்ன என்பது மக்களுக்கு நன்கு தெரியும். பல்வேறு நிதி நெருக்கடியான சூழ்நிலையில் முதல்வர்அவர்கள் நான்கு மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் 6000 ரூபாய் அறிவித்துள்ளார்கள். இந்த நிவாரணத் தொகை கடந்த இரண்டு தினங்களாக வழங்கப்பட்டு. வருகிறது. நிவாரண உதவியை பெறுகின்ற பொதுமக்கள் முதல் வரை மனதார பாராட்டுகிறார்கள்.

எனவே மக்கள் இந்த சூழ்நிலையில் முதல்வரை பாராட்டுவது ஆட்சிக்கு கிடைத்த நற்சான்றிதழ் ஆகும். இவ்வாறு அமைச்சர் பெரிய கருப்பன் கூறினார். பேட்டியின் போது மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், சிவகங்கை நகர்மன்ற தலைவர்சி.எம். துரைஆனந்த், பேரூராட்சி மன்ற தலைவர் த.சேங்கை மாறன், ஊராட்சி மன்ற தலைவர் கே.எஸ்.எம்.மணி முத்து ஆகியோர் உடன் இருந்தார்கள்.

### நெல்லை மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட

# அம்பாசமுத்திரம் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் ஆய்வு!

## இரா.ஆவுடையப்பன் முன்னிலையில் அமைச்சர் பி.மூர்த்தி மேற்கொண்டார்!

நெல்லை.டிச.21-

நெல்லை மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அம்பாசமுத்திரம் தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளை வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இது தொடர்பாக அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்ததாவது:-

நெல்லை மாநகர் மற்றும் மாவட்ட பகுதியில் கனமழை பெய்த நிலையில் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியிலும் கன மழை நீடித்தால் அணைகளில் இருந்து உபரி நீர் வெளியேற்றப் பட்டதாலும் தாமிரபரணி ஆற்றில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால் குடியிருப்பு பகுதிகள்,விவசாய நிலங்களை வெள்ளநீர் சூழ்ந்தது. பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டது.அதனை தொடர்ந்து முதலமைச்சர் அவர்கள் உடனடியாக வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட மாவட்டத்தில் துரிதமாக மீட்ப பணிகளை மேற்கொள்ள அமைச்சர்களை நியமித்து உத்தரவிட்டார்கள். அதனை தொடர்ந்து அம்பாசமுத்திரம் தொகுதிக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளை ஆய்வு செய்யப்பட்டது. மேல ஓமந்தநல்லூர் பகுதியில் மழையால் சேதம் அடைந்த வீடு, சாலை மற்றும் குளம், கால்வாய்கள் பார்வையிடப்பட்டது. தொடர்ந்து கோபாலசமுத்திரத்தில் தாமிரபரணி நதி அருகே துண்டிக்கப்பட்ட சாலை, உடைப்பு ஏற்பட்ட கால்வாய் மற்றும் ஆற்று பாலம் அங்கு சேதம் அடைந்த விவசாய நிலங்களையும் கொலுமடை பகுதியிலும் வெள்ளச் சேதம் பார்வையிடப்பட்டது.

நெல்லை மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் அதிக அளவில் சேதம் அடைந்துள்ளது.மக்கள் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தேவையான நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. இங்கு அதிக அளவில் விவசாயம் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளது.இது முறையாக சேதம் கணக்கீடு செய்யப்பட்டு உரிய நிவாரண வழங்கப்படும். மேலும் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள பொது மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டது. விவசாயப் பயிர்கள் அதிகம் சேதம் அடைந்துள்ளது. இதனை உரிய முறையில் கணக்கீடு செய்து நிவாரணம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் மேலும் ஆய்வு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இவ்வாறு அமைச்சர் மூர்த்தி கூறினார்.

இந்நிகழ்வில் ஞானதிரவியம் எம்.பி. மாவட்ட துணை செயலாளர் தமயந்தி, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் செல்வசூடாமணி உள்பட உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

### மிக்ஜாம் புயல் நிவாரணத்திற்கு

# சிவகங்கை சிறுவர்கள் நிதி!

## மாவட்ட ஆட்சியரிடம் அளித்தனர்!

சிவகங்கை, டிச. 21-

சிவகங்கையில் கே.கமல கண்ணன் திருமதி ராதிகா ஆகியோரின் மகன்கள் அருண்பிரகாஷ்,ஆதித்யன், செல்வி நர்மதா ஸ்ரீ ஆகியோர் முதல்வரின் வேண்டுகோளை ஏற்று சென்னையில் மிக்ஜாம் புயலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவியாக சகோதர சகோதரிகள் மூன்று பேர் ரூபாய் 4536 தொகையினை மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித்திடம் வழங்கினார்கள்.

இதில் அருண்பிரகாஷ் சிலம்பாட்டத்தில் சுருள் வால் போட்டியில் வெற்றி பெற்ற தொகையான ரூபாய் 2000ம், ஆதித்யன் தான் சேமித்து வைத்திருந்த ரூபாய் ஆயிரம் நர்மதா ஸ்ரீ உண்டியலில் சேமித்து வைத்திருந்த ரூபாய் 1536 ஆக மொத்தம் ரூபாய் 4536 பணத்தினை மாவட்ட ஆட்சியரிடம் நேரில் வழங்கினார்கள். அவர்களின் இத்தகைய செயலுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களை பாராட்டினார்.



விருதுநகரில் 'மக்களுடன் முதல்வர்' திட்டத்தினை சட்டமன்ற உறுப்பினர் எ.ஆர்.சீனிவாசன் துவக்கி வைத்தார். உடன் நகர் மன்ற தலைவர் எஸ்.ஆர்.எஸ்.ஆர்.மாதவன், நகர செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.தனபாலன், நகர்மன்ற துணைத் தலைவர் தனலட்சுமி துளசிராமன், பொதுக் குழு உறுப்பினர் பொ.மதியழகன், மாவட்ட தொழிலாளர் அணி ஏ.எஸ்.கே.ரமேஷ் குமார் மற்றும் நகர் மன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி மாநகரில் பெய்த கன மழையால் பல்வேறு பகுதிகளில் வீடுகளை தண்ணீர் சூழ்ந்துள்ளது. எனவே அங்கிருந்து மீட்கப்பட்ட மக்கள் பாதுகாப்பாக நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். பழைய பேருந்து நிலையத்தில் உள்ள நிவாரண முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு, அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மதிய உணவு வழங்கினார். அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, ஆர்.எஸ். இராஜகண்ணப்பன், உள்ளிட்டோர் உடன் உள்ளார்கள்.

### தருமபுரி மாவட்டத்தில் - பல்வேறு துறைகளின் சார்பில்

# 642 பயனாளிகளுக்கு ரூ.3.71 கோடியில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கல்!

## மருத்துவத் துறை நிகழ்ச்சியில் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தகவல்!

தருமபுரி, டிச.21-

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்ததாவது :-

தருமபுரி மாவட்டத்தில் இன்றைய தினம் ரூ.112.75 இலட்சம் மதிப்பீட்டில் 4 புதிய கட்டிடங்கள் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டும், ரூ.2.53 கோடி மதிப்பீட்டில் 4 மருத்துவ திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் வருவாய்த் துறை, வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, ஊரக வளர்ச்சித்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை,



பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் 642 பயனாளிகளுக்கு ரூ. 3.71 கோடி மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டும் உள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் 108 ஆம்புலன்ஸ் திட்டம், வருமுன் காப்போம் திட்டம், கலைஞர் காப்பீட்டுத்திட்டம் உள்ளிட்ட மருத்துவ திட்டங்கள் தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டு, செயல்படுத்தப்பட்டது. அவர்களின் வழியில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு மக்களை தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் திட்டம், இதயம் காப்போம் திட்டம் போன்ற மருத்துவ திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறது.

மருத்துவத்துறையில் கொரோனா நோய் தொற்று காலத்தில் பேரிடர் கால தடுப்பூசி பணிகள், அவசர கால தடுப்பு பணிகள், சிகிச்சை பணிகள் உள்ளிட்ட பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப் பட்டது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பொதுமக்களின் மருத்துவ தேவைகளுக்காக எண்ணற்ற மருத்துவ கட்டமைப்புகளை ஏற்படுத்தி வருவதோடு, பல்வேறு மருத்துவதிட்டங்களையும் அறிவித்து செயல்படுத்தி வருகிறது.

இவ்வாறு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

### மேலூர் - திருமங்கலம் பகுதி விவசாயிகள் கோரிக்கையை ஏற்று

# விவசாயத்திற்கு தண்ணீர் திறந்து விட முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

## விவசாயிகள் - பொதுமக்கள் நன்றி - மகிழ்ச்சி!

மதுரை, டிச. 21-

மதுரை மாவட்டம் மேலூர் மற்றும் திருமங்கலம் பகுதி விவசாயிகள் ஒருபோக நெல் சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விட கோரிக்கை விடுத்தார்கள், போதிய நீர் அணையில் உள்ளதால் விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று கழக தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விவசாயத்திற்கு தண்ணீர் திறந்து விட உத்தரவிட்டார், இந்த மகிழ்ச்சியான செய்தி அறிந்த மேலூர் மற்றும் திருமங்கலம் பகுதி விவசாயிகள் முதல்வருக்கு நன்றி பாராட்டி மகிழ்ந்தார்கள். அதன் விபரம்,

மதுரை மாவட்டம் மேலூர் மற்றும் திருமங்கலம் பகுதியில் ஒருபோக நெல் சாகுபடிக்கு கடந்த ஆண்டுகளில் கழக ஆட்சியில் போதிய அளவு அணையில் தண்ணீர் வந்ததால் திறந்து விடப்பட்டு நெல் சாகுபடி சிறப்பாக நடைபெற்றது.

இந்த ஆண்டு சற்று தாமதமாக அணையில் நீர்மட்டம் உயரத் துவங்கியது. அதனால் முதலில் குடிநீருக்காக தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதை தொடர்ந்து இப்பகுதி விவசாயிகள், பொதுமக்கள் ஒருபோக நெல் சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விட கோரிக்கை விடுத்தார்கள். அதே போன்று திரு மங்கலம் பகுதி விவசாயி களும் தங்கள்பகுதிவிவசாயத்திற்காக தண்ணீர் திறக்க வேண்டும் என கோரிக்கை வைத்தனர்.

மேலும் அணையின் நீர் மட்டம் உயர்ந்ததால் விவசாயிகளின் கோரிக்கையை ஏற்ற கழக தலைவர் - தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உடனடியாக ஒருபோக நெல் சாகுபடிக்கும், திருமங்கலம் பகுதிக்கும் தண்ணீர் திறந்து விட உத்தரவிட்டார்.

இதனால் மேலூர் பகுதியில் ஒருபோக பாசன பரப்பளவில் 85ஆயிரத்து 563 ஏக்கர் விளை நிலங்களும், திருமங்கலம் பிரதான கால்வாயின் கீழ் உள்ள ஒருபோக பாசன பகுதிகளான 19ஆயிரத்து 439 ஏக்கர் விளை நிலங்களும் சேர்த்து 1லட்சத்து 5ஆயிரத்து 2ஏக்கர் விளை நிலங்கள் பயனடையும் வகையில் வைகை அணையிலிருந்து நீர் திறந்து விடப்பட்டுள்ளது.

நெல் அறுவடை முடியும் வரை தண்ணீர் திறந்து விடப்பட உள்ளது. இந்த மகிழ்ச்சியான செய்தி அறிந்த மேலூர் மற்றும் திருமங்கலம் பகுதி விவசாயிகள், பொதுமக்கள் கழக தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும், தண்ணீர் திறக்க பெரும் முயற்சி மேற்கொண்ட வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மற்றும் அதிகாரிகளுக்கு நன்றி பாராட்டு தெரிவித்து மகிழ்ச்சி அடைந்தார்கள்.

இதன் மூலம் மேலூர் மற்றும் திருமங்கலம் பகுதி பாசன விவசாயிகளை வைத்து அரசியல் செய்து வந்தவர்களின் நிலைப் பாட்டிற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.



சிவகங்கை நகரில் மக்களுடன் முதல்வர் திட்டத்தினை கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித், சிவகங்கை நகர்மன்றத் தலைவர் சி.எம்.துரைஆனந்த், ஊராட்சி மன்றத் தலைவர் கே.எஸ்.எம். மணிமுத்து, பேரூராட்சி மன்றத் தலைவர் த.சேங்கைமாறன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.



தென்காசி மாவட்டம் தென்காசி நகராட்சிக்கு உட்பட்ட மலையான் தெருவில் உள்ள நிவாரண மையத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்களை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் நேரில் பார்வையிட்டு அங்கு தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் துரை.இரவிச்சந்திரன், தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் சுரேஷ்குமார், நகர் மன்ற தலைவர் சாதிர், துணைத் தலைவர் சுப்பையா உள்பட பலர் உள்ளனர்.



நெல்லை மாவட்டத்தில் மழை வெள்ளத்தின் காரணமாக மேலச்செவல் பேரூராட்சி மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி நிவாரணப் பொருட்களை வழங்கினார். அங்கு அவர்களிடம் குறைகளை கேட்டறிந்தார். உடன் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் ஆவுடையப்பன்,ஞானதிரவியம் எம்.பி., மாவட்ட துணைச் செயலாளர் தமயந்தி,மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் செல்வசூடாமணி உள்பட உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளனர்.

### சமுதாயக் கூடங்களில் 521 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்

# தென்காசியில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணப் பொருட்கள்!

## அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் வழங்கினார்

தென்காசி. டிச.21-

தென்காசி மாவட்டத்தில் தற்போது வரை பெரு மழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 15 நிவாரண முகாம்களில் 521 நபர்கள் சமுதாய நலக் கூடங்களிலும், கல்யாண மண்டபங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு அடிப்படை தேவையான உணவு,குடிநீர் மற்றும் போர்வை ஆகியவை வழங்கப்பட்டு வருகிறது.என வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அமைச்சர் கே.கே.எஸ் எஸ். ஆர்.ராமச்சந்திரன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

தென்காசி மாவட்டத்தில் தற்போது வரை பெரு மழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 15 நிவாரண முகாம்களில் 521 நபர்கள் சமுதாய நலக்கூடங்களிலும்,கல்யாண மண்டபங்களிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.அவர்களுக்கு அடிப்படை தேவையான உணவு,குடிநீர் மற்றும் போர்வை ஆகியவை வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் மழையினால் 83 வீடுகள் பகுதி சேதமும்,46 வீடுகள் முழு சேதமும் ஆகி உள்ளது.இம்மழையினால் திருவேங்கடம் வட்டத்தில் ஒரு நபருக்கு காயங்கள் ஏற்பட்டு நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.மேலும் 2 ஆட்டுக்குட்டிகளும்,1 பசு மாடும் இறந்துள்ளது, மேற்கண்ட சேதங்களுக்கு அரசின் உரிய நிவாரணம் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.மாவட்டத்தில் மனித உயிர் சேதம் எதுவும் இல்லை.

நெற்பயிர் 3009 ஹெக்டேர், மக்காச்சோளம் 4269 ஹெக்டேர்,பயிர் வகைகள் 13,844 ஹெக்டேர் என மொத்தம் 21,222 ஹெக்டேர் பரப்பில் பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன. இவற்றை சம்பந்தப்பட்ட வேளாண்மைதுறை, வருவாய்த்துறை,அலுவலர்கள் நீர் வடிந்த பின்னர் உரிய நிவாரணத்திற்கு பரிந்துரை அறிக்கை பெறப்பட்டு பயிர் சேதத்திற்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தற்போது வரை தென்காசி மாவட்டத்தில் உள்ள குளங்களில் பொதுப்பணித் துறை பராமரிப்பில் உள்ள குளங்களில் 543 குளங்களில் 353 குளங்கள் முழுவதும் நிரம்பி உள்ளன.மேலும் 137 குளங்கள் 75 சதவீதம் நிரம்பியுள்ளன.38 குளங்கள் 50 சதவீதத்திற்கும் 75 சதவீதத்திற்கும் இடைப்பட்ட அளவில் உள்ளன. மேலும் ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பில் உள்ள குளங்களில் மொத்தம் 415 குளங்களில் 151 முழுவதும் நிரம்பியுள்ளது.135 குளங்கள் 75 சதவீதத்திற்கு மேல் 99 சதவீதத்தில் நிரம்பி உள்ளது.79 குளங்கள் 50 சதவீதம் முதல் 75 சதவீதம் வரை நிரம்பியுள்ளது.

இவ்வாறு அமைச்சர் கே.கே.எஸ்.எஸ் ஆர்.ராமச்சந்திரன் தெரிவித்தார்.

பின்னர் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.ராமச்சந்திரன் தென்காசி நகராட்சிக்கு உட்பட்ட மலையான் தெருவில் உள்ள நிவாரண மையத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பொது மக்களை நேரில் பார்வையிட்டு நிவாரண முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள பொது மக்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்கினார்.

இந்நிகழ்வில் மாவட்ட கண்காணிப்பாளர் சுன் நோக்கம் ஜடக் சிரு, மாவட்ட ஆட்சியர் துரை. ரவிச்சந்திரன், தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன்,மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் சுரேஷ்குமார்,மாவட்ட வருவாய் அலுவலர் பத்மாவதி,தென்காசி நகர் மன்ற தலைவர் சாதிர், துணைத் தலைவர் சுப்பையா உள்பட அரசு அலுவலர்கள்,உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### நெல்லை அம்பாசமுத்திரத்தில்

# மழை வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட 12 ஆயிரம் பேருக்கு நிவாரணப் பொருட்கள்!

## அமைச்சர் பி.மூர்த்தி - இரா.ஆவுடையப்பன் வழங்கினர்!

நெல்லை, டிச.21.

நெல்லை மாவட்டத்தில் கடந்த மூன்று தினங்களுக்கு முன்பு பெய்த அதி கனமழையால் மாநகரம் மற்றும் மாவட்டங்களில் பெரும் சேதம் அடைந்துள்ளது. முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களுக்கு வேண்டிய அடிப்படை தேவைகளையும் நிவாரண முகாம்களையும் உடனடியாக அமைக்க மாவட்ட நிர்வாகத்துக்கு அறிவுரை வழங்கினார்கள்.

மேலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரண உதவிகள் வழங்கவும் முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். அதன்படி நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் சட்டமன்ற தொகுதியில் வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் ஆகியோர் சுமார் 12,000 பேருக்கு 20 வகையான நிவாரணப் பொருட்களை வழங்கி தொடங்கி வைத்தார்கள்.

பின்னர் அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்ததாவது.

அதி கனமழை வெள்ளத்தால் நெல்லை,தூத்துக்குடி,கன்னியாகுமரி, தென்காசி ஆகிய மாவட்டங்கள் அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ளது. தாமிரபரணி ஆற்றில் ஏற்பட்ட கடும் வெள்ளப்பெருக்கால் நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் சட்டமன்ற பகுதியில் பல்வேறு இடங்களில் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளது. விவசாய நிலங்களும் பாதிக்கப்பட்டுள்ளது. வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் மீட்கப்பட்டு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.இந்த நிலையில் முதலமைச்சர் அவர்கள் வெள்ளம் பாதித்த பகுதிகளுக்கு அமைச்சர்களை நியமித்து மீட்பு மற்றும் நிவாரண உதவிகளை வழங்க உத்தரவிட்டதை தொடர்ந்து வெள்ளம் பாதித்த பகுதிகளில் அமைச்சர்கள் தீவிரமாக களப்பணி ஆற்றி வருகின்றனர்.

நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் சட்டமன்ற தொகுதியில் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டு நிவாரண உதவிகளை வழங்கியிருக்கிறோம். இதற்காக லாரி லாரி ஆக நிவாரண பொருட்கள் கொண்டு வரப்பட்டு மண்டபங்களில் வைக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப் பட்டும் வருகிறது.அம்பாசமுத்திரம் திருமண மண்டபத்தில் வைத்துள்ள அரிசி,மளிகை பொருட்கள்,பாத்திரம், பெட்ஷீட் உள்பட 20 வகையான பொருட்களை பார்வையிட்டேன்.

மேலும் அம்பாசமுத்திரம் தொகுதியில் பாதிக்கப்பட்ட பகுதிகளை விவசாய நிலங்களை 2வது நாளாக பார்வையிட்டு வருகிறோம்.முகாம்களில் ஆங்காங்கே தங்க வைக்கப்பட்டுள்ளவர்களை நேரில் சந்தித்து அவர்களுக்கு உணவு பொருட்கள் உள்ளிட்ட நிவாரண உதவிகளையும் வழங்கி வருகிறோம். இந்த பகுதியில் பாதிக்கப்பட்ட 12,000-ம் பேருக்கு உடனடியாக நிவாரண உதவிகள் வழங்கும் வகையில் பொருட்கள் வரவழைக்கப்பட்டு கொடுக்கப்பட்டு வருகிறது. மேலச்செவல், கோபாலசமுத்திரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை விவசாய நிலங்களும் பாதிக்கப்பட்டுள்ளது.இந்த பகுதிகளில் நேற்று இரவு 12 மணி வரை ஆய்வு மேற்கொண்டோம். விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். முதல்வர் அவர்கள் நெல்லை, தூத்துக்குடி பகுதியில் வெள்ளம் பாதித்த பகுதிகளை பார்வையிட உள்ளார்கள். முதல்வர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டு உரிய நிவாரணத் தொகையை அறிவிக்க உள்ளார்கள். பாதிக்கப்பட்ட அனைத்து இடங்களையும் அமைச்சராகிய நான் அதிகாரிகள் மாவட்ட செயலாளர் ஆகியோர் தொடர்ந்து பார்வையிட்டு தேவையான உதவிகளை செய்து வருகிறோம். மாஞ்சோலை பகுதியில் மண் சரிவு ஏற்பட்டு போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது இது குறித்து மாவட்ட ஆட்சியரிடம் தகவல் தெரிவிக்கப்பட்டு உடனடியாக அந்த பகுதிக்கு போக்குவரத்து தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆ.பிரபாகரன், கே.கே.சி. பிரபாகரன்,மாநில விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன்,மாவட்ட துணை செயலாளர்கள் மைக்கேல், தமயந்தி,வி.கே.புரம் நகர செயலாளர் கணேசன்,ஒன்றிய குழு தலைவர் பரணி சேகர்,மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் செல்வசூடாமணி உள்பட உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள்,கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### மருத்துவத் துறையில்

# தமிழ்நாடு இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது!

## தருமபுரி மாவட்டம் - அரூரில், பொது சுகாதாரத்துறையில் முடிவுற்ற பல்வேறு திட்டப்பணிகளைத் திறந்து வைத்து - அமைச்சர் மா.சுப்பிரமணியன் பெருமிதம்!

தருமபுரி, டிச.21-

தருமபுரி மாவட்டம் - அரூரில், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருத்துவத் துறை சார்பில் முடிவுற்ற பல்வேறு திட்டப் பணிகளைத் திறந்து வைத்தும், புதுப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் பேசிய மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், “மருத்துவத் துறையில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகத் திகழுகிறது!” என்று குறிப்பிட்டார்.

தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், கீரைப்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறையின் சார்பில் வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணி யன் ஆகியோர் ரூ.1.13 கோடி மதிப்பீட்டில் 4 முடிவுற்ற புதிய துணை சுகாதார நிலைய கட்டடங்கள் மற்றும் புதிய செவிலியர் குடியிருப்பு கட்டத்தினை திறந்து வைத்தும், ரூ.2.53 கோடி மதிப்பீட்டில் 2 புதிய துணை சுகாதார நிலைய கட்டடங்கள், ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம் மற்றும் வட்டார பொது சுகாதார அலகு கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டி வைத்தும், பல்வேறு துறைகளின் சார்பில் 642 பயனாளிகளுக்கு ரூ. 3.71 கோடி மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை நேற்று முன்தினம் (19.12.2023) வழங்கினார்கள். இவ்விழாவிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கி.சாந்தி தலைமை வகித்தார்.

தருமபுரி மாவட்டத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறையின் சார்பில் அரூர் வட்டம், வேப்பம்பட்டியில் 15வது நிதிக்குழு நிதியின் கீழ் ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய அரசு துணை சுகாதார நிலைய



கட்டடம், பாலக்கோடு வட்டம், எண்டப்பட்டியில் 15 வது நிதிக்குழு நிதியின் கீழ் ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய அரசு துணை சுகாதார நிலைய கட்டடம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், எச்.புதுப்பட்டியில் 15வது நிதிக்குழு நிதியின் கீழ் ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய அரசு துணை சுகாதார நிலைய கட்டடம், கீரைப்பட்டியில் NHM நிதிக்குழு நிதியின் கீழ் ரூ.22.75 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய ஆரம்ப சுகாதார நிலைய செவிலியர் குடியிருப்பு கட்டடம் என மொத்தம் ரூ.1.13 கோடி மதிப்பீட்டில் 4 முடிவுற்ற புதிய துணை சுகாதார நிலைய கட்டடங்கள் மற்றும் புதிய செவிலியர் குடியிருப்பு கட்டங்கள் அமைச்சர்கள் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம், மா.சுப்பிரமணியன் ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது.

**அமைச்சர் மா. சுப்பிரமணியன் பேச்சு**

இதனை தொடர்ந்து, அமைச்சர் மா.சுப்பிரமணி யன் தெரிவித்ததாவது :-

முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டுதலின்படி, பொது மக்கள் எவ்வித சிரமமுமின்றி மருத்துவ சிகிச்சைகள் மேற்கொள்வதற்கு ஏதுவாக புதிய தமிழ்நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் மருத்துவ கட்டமைப்புகள் தொடர்ந்து உருவாக்கப்பட்டு, திறந்து வைக்கப்பட்டு வருகிறது. நேற்றைய தினம் சேலம் மாவட்டத்தில் மருத்துவமனைகளுக்கு பல்வேறு மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டும், மருத்துவ கட்டடங்கள் திறந்தும் வைக்கப்பட்டுள்ளது. அந்த வகையில், தருமபுரி மாவட்டத்தில் இன்றைய தினம் ரூ.112.75 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டடங்கள் செவிலியர் குடியிருப்பு கட்டடம் என 4 புதிய கட்டிடங்கள் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டது.

மேலும், ரூ.2.53 கோடி மதிப்பீட்டில் 2 புதிய துணை சுகாதார நிலைய கட்டடங்கள், ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம் மற்றும் வட்டார பொது சுகாதார அலகு கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி, திருப்பத்தூர் மாவட்டங்களிலும் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக மருத்துவ கட்டமைப்புகளை உருவாக்கி, திறந்து வைக்க உள்ளோம். ஏற்கனவே தருமபுரி மாவட்டத்தில் கடந்த காலங்களில் 14 ஆரம்ப சுகாதார நிலையங்களில், புற நோயாளிகள் பிரிவு கட்டிடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளதோடு, ரூ.11.20 கோடி மதிப்பீட்டில் பல்வேறு கட்டடங்களும், மருத்துவ உபகரணங்களும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இயக்குநர் மரு.தி.சி.செல்வவிநாயகம், மாவட்ட வருவாய் அலுவலர் பால்பிரின்ஸ்லி ராஜ்குமார், முன்னாள் அமைச்சர் முனைவர்.பழனியப்பன், தடங்கம் பெ.சுப்பிரமணி, இணை இயக்குநர் (மருத்துவம்) மரு.ம.சாந்தி, மரு.ஆர். கே.ஜெயந்தி, வில்சன் ராஜசேகர், மாவட்ட மாற்றுதிறனாளிகள் நல அலுவலர் திருமதி. செண்பகவள்ளி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஜி.சேகர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மனோகரன், திருமதி. வேடம்மாள், வட்டாட்சியர் திருமதி.கனிமொழி, ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர் ஜி.பெருமாள், கீரைப்பட்டி ஊராட்சி மன்றத்தலைவர் திருமதி.அமுதா சங்கர். உட்பட உள்ளாட்சி பிரதிநிதிகள், தொடர்புடைய அலுவலர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப்பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.



நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்கள் சுமார் 12,000 பேருக்கு 20 வகையான நிவாரண உதவிகளை வணிகவரி மற்றும் பத்திர பதிவுத்துறை அமைச்சர் மூர்த்தி, நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் ஆவுடையப்பன் ஆகியோர் வழங்கினர்.உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆ.பிரபாகரன், கே.கே.சி.பிரபாகரன்,மாநில விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் கணேஷ்குமார் ஆதித்தன், ஒன்றிய பெருந்தலைவர் பரணி சேகர்,மாவட்ட துணை செயலாளர் மைக்கேல்,நகர செயலாளர் கணேசன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் செல்வசூடாமணி, உள்பட உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், கழகத்தினர் பலர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**மிசா பி. தம்பித்துரை**
**டிசம்பர் 21 (1990)**



“நெல்லை இரட்டையர்கள்” என்று அழைக்கப்பட்ட இரட்டையர்களில் இவரும் ஒருவர்.

கழகத்தில் தலைமைச் செயற்குழு – பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புகளை வகித்தவர்.

கண்டிகைபேரி ஊராட்சி மன்றத் தலைவராகவும் – மானூர் ஒன்றியப் பெருந்தலைவராகவும் – திருநெல்வேலி நகராட்சி உறுப்பினராகவும் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக நெருக்கடி காலத்தில் மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**





தென் மாவட்டங்களில் இயல்பைவிட அதிகமாக கனமழை பெய்த காரணத்தால், தூத்துக்குடி மாவட்டத்தில் மிகப்பெரிய அளவில் பாதிப்புகள் ஏற்பட்டுள்ள நிலையில், தூத்துக்குடி மாநகரில் நடைபெற்று வரும் மீட்பு பணிகளை நேற்று முன்தினம் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் ஆய்வு செய்தார். தூத்துக்குடி அரசு போக்குவரத்துக் கழகப் பணிமனை அருகில் வெள்ளம் சூழ்ந்த பகுதியை பார்வையிட்டு, தண்ணீரை அப்புறப்படுத்த விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டார். அமைச்சர்கள் கே.என்.நேரு, பி.கீதாஜீவன், ஆர்.எஸ்.இராஜகண்ணப்பன் உள்ளிட்டோர், அப்போது உடனிருந்தனர்.



நெல்லை சந்திப்பு பேருந்து நிலையத்தில் மழைநீர் புகுந்துள்ள நிலையில் அதன் பாதிப்பை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் ஆய்வு செய்தார். மழை நீரை அகற்ற அலுவலர்களை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கேட்டுக்கொண்டார். நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு, மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், சா.ஞானதிரவியம் எம்.பி. உள்ளிட்டோர் உடனிருந்தனர்.







# இடம் பொருள் கலைஞர் 49

**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் திருமானூர் கொள்ளிடம் பாலம்.**






# திருமானூர் கொள்ளிடம் பாலம்

## பொன்விழா கொண்டாடும் தமிழ்நாட்டின் முதல் நீளமான பாலம்!



"அமெரிக்க நாட்டில் சீரான சாலைகளும் பாலங்களும் அமைக்கவும், அவைகளின் செறிவைப் பெருக்கவும் பெரிதும் காரணமாயிருந்த தாமஸ் மெக்டனால்டு என்ற பெருமகனார், ஒரு நாட்டின் முன்னேற்றத்துக்குச் சாலைகளின் இன்றியமையாத தன்மையைக் கூறுங்கால், சொன்னதாவது:

'ஒரு நாடு நல்ல சாலைகள் கொண்டுள்ளதோ இல்லையோ, அது அவைபொருட்டு செலவு செய்தே ஆக வேண்டும். நல்ல சாலைகள் இல்லாதபோது நாடு அதிகம் செலவழிக்க நேரிடுகிறது.' இந்த வாக்கு குறிப்பாக தஞ்சை மாவட்டத்திற்கு முற்றிலும் பொருத்தமானதாகும்".

1973 ஆகஸ்ட் 19 அன்று, திருமானூர் விளாங்குடி ஆகிய கிராமங்களின் அருகில், தஞ்சாவூர், திருச்சி ஆகிய மாவட்டங்களை இணைத்து கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டிருக்கும் பாலத்தின் திறப்புவிழாவின் போது, தமிழ்நாடு தேசிய நெடுஞ்சாலை தலைமைப் பொறியாளர் ஈ.சி.சந்திரசேகரன் வாசித்தளித்த வரவேற்புரையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்.

திருச்சி மாவட்டத்தையும், தஞ்சை மாவட்டத்தையும் இணைப்பதற்கு மேற்கே திருச்சியிலும், கிழக்கே அணைக்கரையிலும் கொள்ளிடத்தின் குறுக்கே இரண்டு பாலங்கள் அமைந்துள்ள நிலையில், இடைப்பட்ட பகுதியில் உள்ளவர்கள் கொள்ளிடம் ஆற்றைக் கடக்க வேண்டுமானால் திருச்சி நகரைச் சுற்றி வர வேண்டும் அல்லது அணைக்கரைப் பகுதியைக் கடந்து வர வேண்டும். இதன் காரணமாக, தஞ்சாவூர் மாவட்ட மக்கள் கொள்ளிடம் ஆற்றைக் கடப்பதற்குச் சிரமப்பட்டு வந்த நிலையில் தஞ்சை மாவட்டம், திருவையாறு, திருச்சி மாவட்டம், திருமானூர் ஆகியவற்றை இணைக்கும் வகையில் கொள்ளிடத்தில் ஒரு புதிய பாலம் கட்ட வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாக இருந்து வந்தது.

அந்தக் கோரிக்கையை நிறைவேற்ற அன்றைய காங்கிரஸ் அரசு அடிக்கல் நாட்டியது. அதுவும் 1967 பொதுத் தேர்தல் நெருங்கி வந்த சமயத்தில்! அந்தத் தேர்தலில் வென்று வந்த நம் கழக அரசு, முந்தைய ஆட்சி விட்டுச் சென்ற பணியை முன்னெடுத்தது. முத்தமிழறிஞர் கலைஞர் முதலமைச்சரான காலத்தில் அந்தப் பாலம் கட்டி முடிக்கப்பட்டு, திறக்கப்பட்டது.

### விவசாயம் - தொழில் இணைப்புப் பாலம்

இந்தப் பாலம் ஏன் இன்றியமையாதது என்பது குறித்து, சந்திரசேகரன் தன் உரையில் இவ்வாறு குறிப்பிட்டார்: "தமிழ்நாட்டின் 'நெற்களஞ்சியமும்' எழில் மிகுந்ததுமான தஞ்சை மாவட்டத்தில் குறுக்கும் நெடுக்கும் ஓடும் பல்வேறு ஆறுகள், வாய்க்கால்கள், வடிகால்கள் கணக்கிலடங்கா. ஒருபகுதியில் விளையும் பொருட்களை மற்ற இடத்திற்குக் கொண்டு செல்லவோ, அல்லது புதுத் தொழில்களை நிறுவவோ, போதிய சாலைகள் இல்லாத காரணத்தால், அதன் பொருட்டு போக்குவரத்துச் செலவு அதிகமாகவும், டாக்டர் கலைஞர் அவர்களின் வாக்குப்படி 'பொன்னான காலம்' விரயமாகவும் நேரிடுகிறது. இதனால் நல்லசாலைகள் பொருட்டு தஞ்சை மாவட்டத்தில் உண்டாகும் செலவைவிட, நல்ல சாலைகள் இல்லாத காரணத்தால் உண்டாகும் இன்னல்களும் பணவிரயமும், அவைகளையும் விட மேலான காலவிரயமும் அதிகமாகிறது என்பது கண்கூடு.

தஞ்சை மாவட்டம், விவசாயத்திற்குப் பெருமையளிக்கிறது என்றால், திருச்சி மாவட்டம் தொழில் திறமைக்கு வலிமை தருவதாக, தொழிற்பேட்டைகள், தொழில்நுட்பக் கல்லூரிகள், தொழிற்சாலைகள், பொறியியற் கல்லூரிகள் கொண்டுள்ளதாக அமைந்து தமிழ்நாட்டுக்குச் சிறப்பைத் தருகிறது. ஆக, **தஞ்சை - திருச்சி மாவட்டங்கள் தமிழ்நாட்டின் இரு கண்கள்** என்றால் மிகையாகாது.

> **தந்தி மூலமாகவே அனுமதி!**
>
> 1967 பொதுத்தேர்தல் வந்த சமயத்தில் திருமானூர் கொள்ளிடம் பாலம் கட்டுவதற்காக பிரதமர் இந்திரா காந்தியின் அனுமதி கேட்டு, அப்போதைய முதலமைச்சர் பக்தவச்சலம் தந்தி கொடுத்தார். தந்தி மூலமாகவே அனுமதி வாங்கி பாலம் கட்ட அடிக்கல் நாட்டப்பட்டது. பிறகு கலைஞர் ஆட்சிக்கு வந்த பிறகுதான் பாலம் கட்டப்பட்டது.

ஒரு நாட்டின் வாழ்க்கை நிலையின் அளவுகோல் அந்நாட்டுச் சாலைச்செறிவே. இந்த உண்மையை உணர்ந்து நமது தமிழக அரசு, சாலை அமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் பல வகுத்து செயலாற்றி வருகிறது".

இந்த அளவு முக்கியத்துவம் வாய்ந்த 'திருமானூர் கொள்ளிடம் பாலம்' கட்டுமானப் பணிகள், 1969 அக்டோபர் 20 அன்று தொடங்கி, 1973 ஏப்ரல் 30 அன்று முடிவடைந்தன. இந்தப் பாலத்தைக் கட்டி முடிப்பதற்குச் செலவான தொகை சுமார் 70 இலட்சமாகும். சென்னை அண்ணா மேம்பாலத்தை விட அதிகச் செலவில் கட்டப்பட்ட பாலம் அந்த நாளில் இதுதான். அண்ணா மேம்பாலத்துக்கு ஆன செலவு 66 இலட்ச ரூபாய் ஆகும்.

### முற்றிலும் போக்குவரத்துக்கான பாலம்

அடுத்து சந்திரசேகரன் இந்தப் பாலத்தின் சிறப்புகளைப் பட்டியலிடத் தொடங்கினார். "இப்பாலம் தமிழ்நாட்டில் இதுநாள் வரை கட்டப்பட்டுள்ள பாலங்கள் எல்லாவற்றிலும் அதிக நீளமுள்ளதாகும். ஏற்கெனவே கொள்ளிட ஆற்றின் மீதுள்ள மேல் அணை, கல்லணை, கீழ் அணை, ஆகியவை நீர்ப்பாசன வசதிக்கும், போக்குவரத்து வசதிக்கும் அமைக்கப்பட்டிருந்தாலும், முற்றிலும் போக்குவரத்து வசதிக்கென்றே கொள்ளிடம் என்ற இடத்திலும், திருமானூருக்கும் விளாங்குடிக்குமிடையிலும் பாலங்கள் கட்டப்பட்டுள்ளன. இப்பாலம் கட்டியதால் இவ்வாற்றின் கரையின் இரு பகுதிகளும் இணைந்ததுடன் திருச்சி மாவட்டத்தில் பெரம்பலூர், அரியலூர் ஆகிய இடங்களிலிருந்து திருவையாறு போன்ற இடங்களை வந்தடைய இதுநாள் வரை இருந்ததுபோல சுற்று வழியாக தஞ்சை நகர் வந்து செல்ல வேண்டிய நிலை இனி இராது. இதன் மூலம் போக்குவரத்து நெரிசலும் தஞ்சை நகரில் பெருமளவு குறையும்.

இப்பாலத்தின் மொத்த நீளம், 3,762 அடி. இதில் 148'9' நீளமுள்ள 23 கண்கள் உள்ளன. இது 'ப்ரீஸ்ட்ரெஸ்ஸட் கான்கிரீட்' எனப்படும் முன்கூட்டி அழுத்தமேற்றிய கற்கலவையினால் ஆன பாலமாகும். பாலத்தின்மேல் பேருந்துகள் எவ்வித இடையூறுமின்றிச் செல்லும் வகையில் 24 அடி அகலமுள்ள சாலை அமைக்கப்பட்டிருக்கிறது.

பாலத்தின் அடித்தளம் ஆற்றின் படுகை மட்டத்திலிருந்து 15 அடியிலிருந்து 20 அடி உயரத்தில் இருக்கிறது. இதனால் வெள்ளக்காலங்களில் கூட போக்குவரத்திற்கு இடையூறு ஏதுமிராது. இப்பாலத்தின் கடைக்கால் 62 அடி ஆழமுள்ள ஒற்றைக்கிணற்றால் அமைக்கப்பட்டுள்ளது.

இப்பாலத்திற்கு 750 மெட்ரிக் டன் சாதாரண இரும்புக் கம்பிகளும் (மைல்ட் ஸ்டீல்), 218 மெட்ரிக் டன் வலுவேற்றுப்பட்ட இரும்புக் கம்பிகளும் (ஹை டான்சில் ஸ்டீல்), 4,346 மெட்ரிக் டன் சிமெண்டும் தேவைப்பட்டன. பல்வேறு இடையூறுகள், வெள்ளக் குறுக்கீடுகள், மின் பற்றாக்குறைகளுக்கு இடையிலும் காலதாமதமின்றி இப்பாலம் கட்டி முடிக்கப்பட்டது மகிழ்ச்சிக்குரியதாகும்".

முத்தமிழறிஞர் கலைஞர் தன் மூச்சை நிறுத்தி விட்டிருந்தாலும், அவர் கட்டிச் சென்ற இந்தப் பாலம் இன்றும் மக்களுக்குச் சேவையாற்றிக் கொண்டிருக்கிறது..!

...வலம் வருவோம்

## குஜராத்தில் வைரம்... வாரணாசியில் தியானம்...!

தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலின் இந்தியா கூட்டணிக் கூட்டத்துக்காக டெல்லி சென்றதை பா.ஜ.க.வினர் கடுமையாக விமர்சிக்கின்றனர்.

வெள்ளம் பாதித்த பகுதிகளில் 8 அமைச்சர்கள் களத்தில் இருக்கிறார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்பட மக்கள் பிரதிநிதிகளும் களத்தில். பணிகள் ஏதும் பாதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

இன்னொருபுறம் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பாக பிரதமர் மோடி நாடாளுமன்றத்துக்கு வந்து விளக்கம் அளிக்க வேண்டும் என்று கேள்வி கேட்ட நூற்றுக்கும் மேற்பட்ட எம்.பிக்கள் இடைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். மோடியோ நாடாளுமன்றம் பக்கம் எட்டிக்கூட பார்க்கவில்லை.

ஏகப்பட்ட பில்டப்களுடன் தன்னால் கட்டப்பட்ட நாடாளுமன்றக் கட்டடத்தின் பாதுகாப்பு சந்தி சிரிக்கும்போது அதுபற்றி பதில்கூட அளிக்காமல் அப்படி என்ன முக்கியமான பணிகளை மோடி செய்திருக்கிறார் தெரியுமா?

குஜராத் சூரத்தில் வைர வியாபாரிகளுக்கான பிரமாண்டமான வர்த்தக மையத்தைத் திறந்துவைத்திருக்கிறார். வாரணாசியில் ஒரு தியான மையத்தைத் திறந்துவைத்திருக்கிறார்.

**-பத்திரிகையாளர் சுகுணா திவாகர் ஃபேஸ்புக் பதிவு**

## ஃப்ளாஷ்பேக்



### கேள்வியும் சிரிப்பும்!

நாகை மாவட்டம் வேதாரண்யம் ஒன்றியக் குழு உறுப்பினராக 2011-ஆம் ஆண்டு உதய சூரியன் சின்னத்தில் நின்று வெற்றி பெற்றேன். பிறகு தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற நானும் ஆயக்காரன்புலம் ஒன்றியக் குழு உறுப்பினரும் அண்ணா அறிவாலயம் சென்றோம். அவரது அறைக்குள் நுழைந்ததும் தலைவர் கலைஞர் அவர்கள் என்னிடம் "எந்த ஊருயா?" என்று கேட்டார். "சோழமண்டலம் அய்யா" என்றேன். மீண்டும், "ஊர் எது?" என்றார்கள். இப்போது 'வேதாரண்யம்' என்றேன். அதற்கு "வேதாரண்யம் சோழமண்டலத்தில் இருப்பது எனக்கு தெரியாதாய்யா" என்று சொல்லிச் சிரித்தார். பிறகு நான் எடுத்துச் சென்றிருந்த புத்தகத்தில் கையெழுத்திட்டுத் தந்தார்.



அசோக்குமார்

**-ரெ.அசோக்குமார், மாவட்டத் துணைத் தலைவர், கழகச் சுற்றுச்சூழல் அணி, நாகப்பட்டினம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### வள்ளுவர் கோட்டத்தில் பதவியேற்பு!

**1989-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க 3-வது முறையாக வெற்றி பெற்றது. கலைஞரின் எண்ணத்தில் உதித்த வள்ளுவர் கோட்டத்தில், முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். பதவிப் பிரமாண நிகழ்ச்சியிலும், அன்று மாலை மெரினா கடற்கரையில் நடைபெற்ற வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் பிரமாண்ட பொதுக் கூட்டத்திலும் சமூக நீதிக் காவலர் வி.பி.சிங் கலந்துகொண்டார். "கலைஞர் உருவாக்கிய வள்ளுவர் கோட்டத்தில் பதவிப் பிரமாணம் ஏற்றுக் கொண்டிருக்கிறார். இந்த வெற்றி இந்தியாவுக்கே வழிகாட்டும்" என்று வாழ்த்தினார் சிங்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 335




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.